# நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் போதித்த நற்பண்புகள்.

[ Tamil – தமிழ் – تاميلي ]

...இம்தியாஸ் யூசுப் ஸலபி

2014 - 1435

IslamHouse.com

# مكارم الأخلاق من موارد محمد ﷺ

« باللغة التاميلية »

محمد إمتياز يوسف

2014 - 1435

IslamHouse.com

# நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் போதித்த நற்பண்புகள்.

# PART.0க

## M.S.M.இம்தியாஸ் யூசுப் ஸலபி

உயர்ந்த பண்பாடும் ஆளுமையுமுள்ள செயற்பாடும் கொண்ட ஒருவனாக ஒரு முஸ்லிமை உருவாக்குவது இஸ்லாத்தின் அடிப்படை நோக்கமாகும். இதன் மூலம் அல்லாஹ்வின் அன்பையும் மக்களிடையே நேசத்தையும் ஏற்படுத்துகிறது. இனத்தால், மொழியால், தேசத்தால் பிரிந்து நின்றாலும் நற்குணத்தால் பிணைப்பை ஏற்படுத்தி உறவை உயர்த்தி வைக்கிறது. இதனையே அரபியில் ‘‘அக்லாக்’’ என்பர்.

இந்த அக்லாக்கின் பால் இஸ்லாம் உலக மக்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

ஆன்மாக்களை, அதனைக் கொண்டே பயிற்று விக்கிறது. இதற்காகவே வஹீயும் அருளப்பட்டது.

உள்ளம் தூய்மையடைந்து இறைநம்பிக்கையுடனான செயற்பாடுகள் இழையோடுகின்ற போது மனிதன் வெற்றிப் பெற்றவனாக ஆகிவிடுகிறான். நபி(ஸல்) அவர்கள் தங்களது நபித்துவத்தைப்பற்றி குறிப்பிடும் போது 'நான் நற்பண்புகளை பூரணப்படுத்தவே நபியாக அனுப்பப்பட்டுள்ளேன்' என குறிப்பிட்டார்கள். (நூல்: அஹ்மத்)

அகிலத்திற்கு அருட்கொடையாக அனுப்பி வைக்கப்பட்ட தனது இறுதித் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களை உயரிய பண்புகளை அணிகலன்களாகக் கொண்ட முன் மாதிரியான தூதராகவே அல்லாஹ் அனுப்பி வைத்தான். வெற்றிகரமான மனிதனாகவே நபிமுஹம்மத் (ஸல்) அவர்கள் மக்கள் முன் வாழ்ந்து காட்டினார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்:

مَا أَنْتَ بِنِعْمَةِ رَبِّكَ بِمَجْنُونٍ (٢) وَإِنَّ لَكَ لَأَجْرًا غَيْرَ مَمْنُونٍ (٣) وَإِنَّكَ لَعَلَى خُلُقٍ عَظِيمٍ - القلم: ٢ - ٤

உமது இரட்சகனான அல்லாஹ்வின் அருளாள் நீர் பைத்தியக்காரர் அல்ல. உமக்கு முடிவுறாத கூலிகள் நிச்சயமாக உண்டு. நிச்சயமாக (நபியே) நீர் மகத்தான (உயர்ந்த ) பண்புகளைக் கொண்டவராக இருக்கின்றீர் என அல்லாஹ் கூறுகிறான். (அல் குர்ஆன் 68:4)

இமாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் இவ்வசனம் குறித்து விளக்கிடும் போது, அல்லாஹ் தனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் மகத்தான பண்புகளைக் குறித்து வர்ணிக்கும் இந்த வர்ணனையே முழுமையான மார்க்கமாகும். இதனைக் கொண்டே எல்லோருக்கும் பொதுவாக கட்டளையிட் டுள்ளான் என்று கூறினார்கள்.

ஆயிஷா (ரழி) அவர்கள் குறிப்பிடும் போது, நபிகளாரின் பண்பாடுகள் குர்ஆனாகவே இருந்தது என்றார்கள். (நூல் முஸ்லிம்)

திறந்த மனதுடன் நல்ல உள்ளத்துடன் அல்லாஹ் விரும்பு கின்றவற்றை நடைமுறைப்

படுத்த விரைவதே இந்த பண்பாட்டின் யதார்த்தமாகும் என தெளிவுபடுத்துகிறார் கள். (நூல்: மஜ்மூஉர் ரஸாஇலில் குப்ரா 1\ 234)

சிறந்த பண்புகள்தான் முழுமையான மார்க்கமாகும். அதுவே ஈமானின் யதார்த்தங் களாக, மார்க்கத்தின் கட்டளைகளாக இருக்கின்றன என இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) கூறுகிறார்கள். (நூல்: மதாரிஜுஸ் ஸாலிகீன் 2 \ 319)

சிறு வயது முதல் தனது சமூகத்தவர்களின் முன்னால் வாழ்ந்த நபிமுஹம்மத் (ஸல்) அவர்களை (அஸ்ஸாதிக்) உண்மையாளர் (அல் அமீன்) நம்பிக்கையாளர் என அம் மக்கள் போற்றினார்கள்.

இறை தூதுத்துவத்தை மக்கள் ஏற்க மறுத்த போது தன்னு டைய தூய்மையான வாழ்வை ஆதாரமாக வைத்து அன்னார் பேசினார்கள். ‘‘நான் உங்களிடையே பல காலம் வாழ்ந்தவன் நான் சொல்வதை விளங்கிக் கொள்ள மாட்டீர்களா ’’ என்று கேட்டார்கள். மக்கத்து மக்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் முஹம்மத்

பொய்யானவர் என்று கூறியதில்லை. எந்த கீறலும் இன்றி அப்பழுக்கற்றவர்களாக அன்னார் வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்வுக்கு மக்கள் சாட்சி சொன்னார்கள். ஒளிவு மறைவின்றி திறந்த புத்தகமாகவே தனது வாழ்வை முஹம்மத் நபி அமைத்துக் கொண்டார்கள்.

நபி(ஸல்) அவர்களின் செயற்பாடுகள் மிக உயர்ந்த நிலை யிலே இருந்தன. அசிங்கங்களை அவர்கள் ஒரு போதும் ஆதரித்ததில்லை.

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرِو بْنِ الْعَاصِ، أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَمْ يَكُ فَاحِشًا وَلَا مُتَفَحِّشًا وَكَانَ يَقُولُ: «مِنْ خِيَارِكُمْ أَحَاسِنُكُمْ أَخْلَاقًا

அப்துல்லாஹ் இப்னு அம்ரிப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் மானக்கேடான காரியங்கள் செய்பவராகவோ மோசமான பேச்சுக்களை பேசுபவராகவோ இருக்கவில்லை. (மாறாக) அவர்கள் மக்களிடம் உங்களில் சிறந்தவர் பண்பாடில் சிறந்தவராவார் என கூறக்கூடிய வராக இருந்தார்கள் என அறிவிக்கிறார்கள். (நூல் :அஹ்மத் திர்மதி)

நபி(ஸல்)அவர்கள் முன்மாதிரிமிக்க சிறந்த பண்பாளராக விளங்கினார்கள். அன்னாருடைய உயர் பண்புகளை பற்றி நபித்தோழர்கள், அறிவித்ததை இமாம் திர்மதி (ரஹ்) அவர்கள் தங்களடைய ஷமாஇலித் திர்மிதி எனும் நூலில் மிக நேர்த்தியாக தொகுத்துத் தந்துள்ளார்கள். அது போல் ஏனைய இமாம்களும் தங்களுடைய நூல்களில் தொகுத்துத் தந்துள்ளார்கள் அதில் வரக்கூடிய செய்திகளை மிகச் சுருக்கமாக பின்வருமாறு கூறலாம்.

நபியவர்கள் மக்களை இன்முகத்தோடு சந்திப்பார்கள்

நற்குணத்தோடு பழகுவார்கள். எளிமையான சுபாவத் துடன் இருப்பார்கள். கடுகடுத்தவர்களாக, இறுகிய மனம் படைத்த வராக, கூச்சலிடுபவராக, அடுத்தவர்களின் குற்றம் குறைகளை தேடுபவராக, அடுத்த வர்களை அதிகம் புகழ்பவராக கஞ்சத்தனம் செய்பவராக இருக்க மாட்டார்கள்.

அடுத்தவர்களின் கஷ்டங்களை சுமக்கக் கூடியவராக, தேவையுடையோரின் தேவைகளை

நிவர்த்தி செய்யக் கூடியவராக, மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்தக் கூடியவராக, இனபந்துகளை அரவணைக்கக் கூடியவராக இருந்தார்கள்.

சண்டையிடுதல், வீண் பேச்சுக்கள் ஈடுபடுதல், பெருமை யடித்தல், அடுத்தவரை இழிவாக கருதுதல், பொய் பேசுதல், புறம் பேசுதல் போன்ற காரியங்களிலிந்து தவிர்ந்திருப் பார்கள்.

கெட்ட வார்த்தைகள் பேசுபவராவோ, கெட்ட செயல்கள் புரிபவராகவோ இருந்ததில்லை. தீயதை தீயதைக் கொண்டு பரிகாரம் காண மாட்டார்கள். கடைவீதியில் சண்டை பிடிக்க மாட்டார்கள். பொய் பேசுவதை விரும்ப மாட்டார்கள்.

தங்களது மனைவிமார்களுக்கும், தங்களுக்கு பணியாற்றிய வர்களுக்கும் ஒரு போதும் அடித்ததில்லை. தங்களது மனைவிமாரிடத்தில் சிறந்தவரே உங்களில் சிறந்தவர் என்று கூறுவார்கள்.

சிறுவர்களை கடந்து சென்றால் ஸலாம் கூறுவார்கள், சிறுவர்களின் தலைகளை வருடி விடுவார்கள்.

கொஞ்சும் மொழியில் மிஞ்சி விளையாடு வார்கள். பிள்ளைகளிடத்தில் நீதமாக நடக்கு மாறும் அன்பு காட்டு மாறும் கூறுவார்கள். விருப்பமில்லாத பேச்சுக்களை கவனிக்காமல் விட்டு விடுவார்கள்.

நபி பேசும்போது நபித்தோழர்கள் -தங்கள் தலைகளின் மீது பறவைகள் இருப்பது போல்- அசையாமல், அமைதியாக இருப்பார்கள். நபியின் முன்னிலையில் சண்டை பிடிக்க மாட்டார்கள். ஒருவர் பேசும்போது இடை மறைத்து நபியவர்கள் பேச மாட்டார்கள். ஸஹாபாக்கள் (நபியின் தோழர்கள்) பேசும் போது சிரித்தால் சிரிப்பார்கள். ஆச்சரியப் பட்டால் தனது ஆச்சரியத்தை வெளிப்படுத்து வார்கள்.

புதியவர்கள் வந்து பேசும்போது கடுகடுப்பான வார்த்தை கள் பேசினாலோ, பொருத்தமற்ற கேள்விகளை கேட்ப தையோ பொருத்துக்

கொள்வார்கள். தம்மிடம் பேசுபவரின் பேச்சை இடைநடுவில் துண்டிக்க மாட்டார்கள்.

தன்னை கொல்வதற்கு வாளேந்தி வந்தவரையும், விருந்தின் போது உணவில் நஞ்சூட்டி தந்தவளையும் மன்னித்தார்கள்.

தனக்கு தீங்கிளைத்த யாரையும் பழிவாங்கியதில்லை.

மார்க்க விவகாரத்தில் வரம்பு மீறினால் மட்டும் தண்டிப்பார்கள்.

தங்களுக்காக எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டும் என்று விரும்பியதில்லை. யாரும் எதையும் கேட்டு இல்லை என்று சொன்ன தில்லை. நாளைக்கென்று எதையும் சேமித்த தில்லை. அன்பளிப்புகளை ஏற்பார்கள். அதற்கு பிரதியுபகாரமும் செய்வார்கள். தனக்கும் தனது குடும்பத்தவருக்கும் தர்மப் பொருட்கள் தடுக்கப்பட்டுள்ளது என்றார்கள்.

அறையிலிருக்கும் கன்னியர் வெட்கப்படுவதை விட அதிகம் வெட்கப்படுவார்கள். அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியானாக இருப்பதையே விரும்பினார்கள்.

சில சில்லற காசுகளுக்காக மக்காவின் பள்ளத்தாக்கில் ஆடுமைத்தவன் நான் என்று அடக்கமாக சொல்வார்கள்.

பெரும்பாலும் தண்ணீரும் ஈத்தப்பழமும் அவர்களுடைய உணவாக இருந்தது. மரணிக்கும் வரை மிருதுவான ரொட்டியை சாப்பிட்டதில்லை.

ஆம்! மகத்தான பண்பாட்டின் சிகரமாக விளங்கிய எங்கள் உயிரிலும் மேலான நபி முஹம்மத் (ஸல்) அவர்களை நாம் நம்பிக்கை கொண்டு பின்பற்ற கிடைத்தமை அல்லாஹ் செய்த மாரும் பெரும் அருளாகும். அல்ஹம்துலில்லாஹ்!

தங்கள் வாழ்வில் முன்மாதரியாக இருந்துக் கொண்டே மக்களிடம் மார்க்கம் பேசினார்கள். அவர்கள் பேசுகின்ற அல்லது போதிக்கின்ற எந்த வார்த்தைக்கும் மாற்றமாக நடந்ததில்லை.

# நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் போதித்த நற்பண்புகள்.

# PART.0உ

# M.S.M.இம்தியாஸ் யூசுப் ஸலபி

ஒவ்வொரு முஸ்லிமும் ஒழுக்க பண்பாடுகளுடன் நடமாடவேண்டும் என்று போதித்தார்கள். ஒரு முஃமினின் ஈமான் (இறை நம்பிக்கை)முழுமை பெறுவதற்கு ஒழுக்க பண்பாடுகளே காரணம் என்றும் கூறினார்கள். பண்பாடு இல்லாத முஸ்லிம் அல்லாஹ் விடத்தில் எந்த மதிப்பும் இல்லாத வன்..

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ« أَكْمَلُ الْمُؤْمِنِينَ إِيمَانًا أَحْسَنُهُمْ خُلُقًا

இறைநம்பிக்கையில் முழுமைப் பெற்ற முஃமின்கள் பண் பாட்டில் சிறந்தவராவர்கள்; என நபி(ஸல்) அவர்கள் கூறி னார்கள்.

அறிவிப்பவர்:அபூஹுரைரா (ரலி) நூல்: அபூதாவுத்.

இந்த பண்பாடே நாளை மறுமையில் நபிகளாருடன் சுவனத்தில் இருக்கக்கூடிய பாக்கியத்தினையும் பெற்றுத் தருகிறது.

عَنْ جَابِرٍ، أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «إِنَّ مِنْ أَحَبِّكُمْ إِلَيَّ وَأَقْرَبِكُمْ مِنِّي مَجْلِسًا يَوْمَ القِيَامَةِ أَحَاسِنَكُمْ أَخْلَاقًا

உங்களில் எனக்கு மிக விருப்பமானவர் மறுமையில் மிக நெருக்கத்திற்குரியவர் பண்பாட்டில் சிறந்தவராவார் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி) நூல்: திர்மிதி

மறுமைக்காக வாழக்கூடிய முஸ்லிம் இந்த உலகில் அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டியவனாக இருக்கிறான். அதன் வழிகாட்டிகளாக அல்லாஹ்வின் குர்ஆனும் நபிகளாரின் வழிகாட்டலும் தரப்பட்டுள்ளது.

பண்பாடுகள் எவை, அநாகரீகமானவை எவை, என பலஹீனமான மனிதன் தீர்மானிப்பதனா

லேயே உலகில் அனாசாரங்களும் அசிங்கங்க ளும் தலைவிரித்தாடுகின்றன.

பகுத்தறிவு கொடுக்கப்பட்டுள்ள மனிதனுக் கான வழி காட்டல்களை வழங்குகின்ற பொறுப்பை பரிபூரணத்துவம் பெற்ற வல்ல ரஹ்மான் ஏற்றுக் கொண்டுள்ளான். படைத்த வனுக்குத்தான் படைக்கப் பட்டவர்களின் இயல்புகளும் உணர்வுகளும் என்னவென்று தெரியும். இதன் நிமித்தமே உலகிற்கு நபிமார்கள் அனுப்பப் பட்டார்கள். வேதங்கள் இறக்கப் பட்டன.

எனவே மனிதனது ஒவ்வொரு அசைவும் செயற்பாடும் அல்லாஹ்வின் வழிகாட்டலான வஹியைக் கொண்டே வடிவமைக்கப்பட வேண்டும். அவ்வாறு வடிவமைக்கப் படும் மனிதனே ‘‘முஃமினாக’’ சிறந்து விளங்கு கிறான். பயபக்தியுள்ளவனாக பணிந்து நடக்கி றான். அல்லாஹ் வின் மன்னிப்பும் சுவனத்தின் உயர்ந்த அந்தஸ்தும் இவர்களுக்கே உரித்தா கிறது.

மக்களுக்கிடையில் பண்பாட்டினை வளர்த்துக் கொள்ளவும் மனித நேயத்தினை மேம்படுத் திடவும் அல்லாஹ் இறக்கிய குர்ஆனைக்

கொண்டு முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் போதித்தார்கள்.

குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

وَسَارِعُوا إِلَى مَغْفِرَةٍ مِنْ رَبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا السَّمَاوَاتُ وَالْأَرْضُ أُعِدَّتْ لِلْمُتَّقِينَ (١٣٣) الَّذِينَ يُنْفِقُونَ فِي السَّرَّاءِ وَالضَّرَّاءِ وَالْكَاظِمِينَ الْغَيْظَ وَالْعَافِينَ عَنِ النَّاسِ وَاللَّهُ يُحِبُّ الْمُحْسِنِينَ (١٣٤) وَالَّذِينَ إِذَا فَعَلُوا فَاحِشَةً أَوْ ظَلَمُوا أَنْفُسَهُمْ ذَكَرُوا اللَّهَ فَاسْتَغْفَرُوا لِذُنُوبِهِمْ وَمَنْ يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا اللَّهُ وَلَمْ يُصِرُّوا عَلَى مَا فَعَلُوا وَهُمْ يَعْلَمُونَ (١٣٥ {آل عمران: ١٣٣ - ١٣٥

உங்கள் இரட்சகனிடமிருந்துள்ள மன்னிப்பின் பக்கமும் வானங்கள் மற்றும் பூமியின் அளவு விசாலமான சுவர்க்கத்தின் பக்கமும் நீங்கள் விரைந்து செல்லுங்கள். அது பயபக்தி யாளர்களுக்காகவே தயார் செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் செல்வ நிலையிலும் வறிய நிலையிலும் (நல்ல றங்களில்) செலவு செய்வார்கள். இன்னும் கோபத்தை மென்று, மனிதர்களை மன்னிப்பவர்களாகவும் இருப்பார் கள். நன்மை செய்வோரை அல்லாஹ் நேசிக்கிறான்.

இன்னும் அவர்கள் மானக்கேடான ஒரு காரியத்தைச் செய்து விட்டாலோ அல்லது தங்களுக்குத் தாங்களே அநீதி இழைத்துக் கொண்டாலோ அல்லாஹ்வை நினைவு கூர்ந்து உடனே தங்களது பாவங்களுக்காக பாவ மன்னிப்புத் தேடுவார்கள். அல்லாஹ்வையன்றி பாவங் களை மன்னிப்பவன் யார்? அவர்கள் அறிந்து கொண்டே தாம் செய்யும் தவறில் நிலைத்திருக்க மாட் டார்கள். (3:133-135)

இறை விசுவாசிகள் (முஸ்லிம்கள்) நடந்து கொள்ளும் உயர்ந்த குணங்களை அல்லாஹ் இவ்வசனங்களில் விபரிக்கிறான். தனக்கு மிகவும் விருப்பத்திற்குரிய மக்களாகவும் இவர்களை அடையாளம் காட்டுகிறான்.

- மக்களுக்கு செலவு செய்பவர்கள்;
- கோபத்தை அடக்கக் கூடியவர்கள்;
- மன்னிப்பு வழங்குபவர்கள்;
- நன்மை செய்பவர்கள்;
- தங்கள் தவறுகளுக்காக உடனே அல்லாஹ் வின் பால் மீளுபவர்கள் என்ற பண்புகளை

கொண்டிருப்ப வர்கள். மனிதர்களுடனான நற்பழக்கமே இறை நேச செல்வர்களாக முஸ்லிமை மாற்றி விடுகிறது.

மேலும் அல்லாஹ் கூறுகையில்..

لَيْسَ الْبِرَّ أَنْ تُوَلُّوا وُجُوهَكُمْ قِبَلَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ وَلَكِنَّ الْبِرَّ مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَالْمَلَائِكَةِ وَالْكِتَابِ وَالنَّبِيِّينَ وَآتَى الْمَالَ عَلَى حُبِّهِ ذَوِي الْقُرْبَى وَالْيَتَامَى وَالْمَسَاكِينَ وَابْنَ السَّبِيلِ وَالسَّائِلِينَ وَفِي الرِّقَابِ وَأَقَامَ الصَّلَاةَ وَآتَى الزَّكَاةَ وَالْمُوفُونَ بِعَهْدِهِمْ إِذَا عَاهَدُوا وَالصَّابِرِينَ فِي الْبَأْسَاءِ وَالضَّرَّاءِ وَحِينَ الْبَأْسِ أُولَئِكَ الَّذِينَ صَدَقُوا وَأُولَئِكَ هُمُ الْمُتَّقُونَ

கிழக்கு மேற்குப் பக்கமாக உங்கள் முகங்களை நீங்கள் திருப்புவது (மட்டும்) நன்மையாகாது. மாறாக அல்லாஹ் வையும், இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார் களையும் நம்புவோரும், தான் விரும்பும் செல்வத்தை (அல்லாஹ்வுக்காக) நெருங்கிய உறவினர், அநாதைகள், வறியோர், வழிப் போக்கர்கள், யாசிப்போர் (ஆகியோருக் கும்), அடிமைகளை விடுதலை செய்வதற்கும் வழங்கி தொழுகையை நிலை நாட்டி ஸகாத்தை கொடுப்போரும் வாக்குறுதி அளித்தால், வாக்கு றுதிகளை நிறை வேற்றுவோரும் வறுமை,

துன்பம், போர் என்பவற்றின் போது சகித்துக் கொள்வோருமே நன்மை செய்பவர்கள் அவர்கள் தான் உண்மை உரைத்தவர்கள். அவர்களே பயபக்தி யாளர்கள்.(2:177)

தொழுகையை நிலை நாட்டுவது மட்டும் அல்லாஹ்வுக்கு உவப்பான காரியமல்ல. ஈமானிய கடமைகளை ஏற்றுக் கொண்டபின் ஏழை, எளியவர்கள், உறவினர், அனாதைகள், கேட்டு வருபவர்கள் ஆகியோருக்கு உதவி ஒத்தாசைகள் புரிதல், கொடுத்த வாக்குறுதியை நிலை நாட்டுதல், துன்பத்தில் பொறுமை காத்தல், இன்பத்தில் அல்லாஹ்வை நினைவு கூர்தல் போன்ற பண்புகளும் அல்லாஹ்வுக்கு உவப்பானது. இதுவே பயபக்தியாளர்ளின் இலக்கணங்களாகும் என்பதை குறிப்பிடு கிறான்.

“தன் செல்வத்தாலும், பொருளாலும், உடலாலும், உள்ளத்தாலும், உள்ளும் புறமும் செயலாற்றும் அத்தனை காரியங்களுக்கும் வணக்க வழிபாடுகளுக்கும் அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டும்” என்ற ஈமானிய பண்பாடுகள் இறைவிசுவாசியை உயர்த்தி வைக்கிறது.

அல்லாஹ்வின் இரு கரங்களால் படைக்கப் பட்ட முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்களது சந்ததிகளையும் அல்லாஹ் இப்பண்பாடுகளைக் கொண்டு சிறப்பிக்கிறான்.

لَقَدْ خَلَقْنَا الْإِنْسَانَ فِي أَحْسَنِ تَقْوِيمٍ (٤) ثُمَّ رَدَدْنَاهُ أَسْفَلَ سَافِلِينَ (٥) إِلَّا الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ فَلَهُمْ أَجْرٌ غَيْرُ مَمْنُونٍ

நிச்சயமாக மனிதனை நாம் அழகான அமைப்பில் படைத்தோம். பின்னர் (அவனது செயற்பாடுகள் காரணமாக) தாழ்ந்தவர்களில் மிகத் தாழ்தவனாக அவனை நாம் ஆக்கினோம்.

(எனினும்) எவர்கள் நம்பிக்கை கொண்டு நல்லறங்களும் புரிந்தனரோ அவர்களைத் தவிர. அவர்களுக்கு முடிவுறாத கூலி உண்டு.(95:4-6)

இஸ்லாம் கூறும் ஒழுக்க மாண்புகள் பண்பாடுகள் தான் இஸ்லாத்தை வளர்த்ததும் வாழவைத்ததுமாகும். மனித இனத்தின் விரோதிகளாக வாழ்ந்த ஜாஹிலியா சமூகத்தை குர்ஆனிய சமூகமாக முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மாற்றி அமைத்ததும் இப்பண்பாடு களை அடிப்படைகளாக கொண்டு தான்.

عَنْ أَبِي ذَرٍّ قَالَ: قَالَ لِي رَسُولُ اللهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: اتَّقِ اللهِ حَيْثُمَا كُنْتَ، وَأَتْبِعِ السَّيِّئَةَ الحَسَنَةَ تَمْحُهَا، وَخَالِقِ النَّاسَ بِخُلُقٍ حَسَنٍ.

“நீ எங்கிருந்தாலும் அல்லாஹ்வை அஞ்சிக் கொள். தவறொன்றை செய்துவிட்டால் நன்மை யொன்றை செய்து விடு. அந்த நன்மை அத்தவறை அழித்து விடும். மக்க ளுடன் அழகிய பண்புகளுடன் செயலாற்று” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூ தர் (ரழி) (நூல்: திர்மிதி,

அல்லாஹ்வை அஞ்சி வாழும் “தக்வா” அனைத்து நற் காரியங்களுக்கும் தலைமை யாகும். தன் மேனியிலும் ஆடைகளிலும் சகதிகள் பட்டுவிடாமல் அசுத்தங்களை கண்டு அவசரமாக அகன்று விடுவது போல் தீய பண்பில் இருந்து நற்பண்பாட்டின் பால் நெருக்கி வைப்பதே இறையச்சமாகும். எனவே இறையச்சம் நிழலாடும்போது நற்பண்புகள் இழையோடுகின்றன. இதுவே மக்களின் மனங்களை வெற்றி கொள்வதற்கும் காரண மாகும். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தங்களது பண்பாடுகளினாலே மக்களை வென்றார்கள்.

“நன்மைகள் செய்தல் (அல்ஹஸனாத்)" என்ற வார்த்தை அல்லாஹ்வின் பால் நெருக்கி வைக்கக்கூடிய அனைத்து விதமான நற் காரியங்களையும் குறிக்கும் ஒரு வார்த்தை யாகும். இந்த “ஹஸனாத்" தீமைகளை விட்டும் தீய பண்பாடுகளை விட்டும் மனிதனை தூரப்படுத்துகிறது.

اتْلُ مَا أُوحِيَ إِلَيْكَ مِنَ الْكِتَابِ وَأَقِمِ الصَّلَاةَ إِنَّ الصَّلَاةَ تَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ وَلَذِكْرُ اللَّهِ أَكْبَرُ وَاللَّهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ العنكبوت: ٤٥

நபியே! இவ்வேதத்தில் உமக்கு வஹியாக அறிவிக்கப் பட்டதை நீர் ஓதிக்காட்டு வீராக.மேலும் தொழுகையை நிலை நாட்டு வீராக. நிச்சயமாக தொழுகை மானக்கேடான தையும் வெறுக்கத்தக்கதையும் விட்டும் தடுத்து விடும். அல்லாஹ்வை நினைவு கூருவது மிகப் பெரியதாகும். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிவான். (29:45)

ஒரு நாளைக்கு ஐந்து முறைதொழுகையில் ஒரு அணியில் தோலோடு தோலாக உரசி நின்று ஏக இரட்சகனுக்கு முன் அடிமைத்துவத்தின் பணிவை காட்டும் போது சகோதர பாசமும் உறவும்

வளர்க்கப்படுகிறது. ஏற்றத் தாழ்வு அகற்றப்படுகிறது. அடுத்தவரை மதித்து நடக்க வேண்டும் தேவைகளை புரிந்து கொள்ள வேண்டும் வேற்றுமை பாராட்டாது தீண்டாமை காட்டாது ஒற்றுமையாக காரியமாற்ற வேண்டும் என்ற பாடம் மீட்டப்படுகிறது. அல்லாஹ்வுக்கான இபாதத்தில் மனிதர்களுக் கிடையிலான பிணைப்பை பண்பாடுகளையும் வளர்த்துக் கொள்ளும் போது இவ்வுலகில் நல்வாழ்வையும் மறுவுலகில் நற்பெயரையும் பெற முடியும்.

இஸ்லாம் கூறும் ஒவ்வொரு வணக்கங்களும் அமைக்கப் பட்டிருப்பதன் நோக்கமும் யதார்த்தமும் இதுவே யாகும்.

عَنْ أَبِي الدَّرْدَاءِ، أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: مَا شَيْءٌ أَثْقَلُ فِي مِيزَانِ الْمُؤْمِنِ يَوْمَ القِيَامَةِ مِنْ خُلُقٍ حَسَنٍ، وَإِنَّ اللَّهَ لَيُبْغِضُ الفَاحِشَ البَذِيءَ.

மறுமை நாளில் ஒரு முஃமினின் தராசில் அதிக கனம் ஏற்படுத்துவது நற்குணம் தான். நிச்சயமாக அல்லாஹ் கெட்டப் பேச்சுக்களை பேசுபவனை தீய செயல்களை செய்பவனை(க் கண்டு) கோபப்படுகிறான் என நபி (ஸல்) அவர்கள்

கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூ தர்தா (ரழி), நூல்: திர்மிதி)

மறுமை நாளில் நன்மை-தீமை நிறுக்கப் படும்போது நன்மை தட்டை கனக்கச் செய்யும் பணியில் பண்பாடு களுக்கு உரிய பங்குண்டு. தீமையான அறுவருப்பான வார்த்தைகளை அல்லாஹ் விரும்புவதில்லை. நல்ல வார்த்தை களையே விரும்புகிறான் “நல்ல வார்த்தையும் தர்மமாகும் என நபி (ஸல்) கூறினார்கள்.

பிறப்பால், படிப்பால், பதவியால் மனிதன் மற்ற மனிதனை விட வேறுபட்டு நின்றாலும் பண் பாட்டினால் பெறப்படும் பதவியே இவ்வுலகி லும் மறுமையிலும் அவனை உயர்ந்த மனிதனாகக் காண்பிக்கிறது.

நன்மை பற்றியும் தீமை பற்றியும் நான் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன். நன்மை என்பது நற்குணமாகும். தீமை (பாவம்) என்பது உம் உள்ளத்தை உறுத்துவதும் மக்கள் அதைப் பார்த்து வெறுப்பதும் ஆகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: நவாஸ் இப்னு ஸம்ஆன் (ரழி), நூல்: முஸ்லிம்)

மக்களுக்கு வெறுப்பூட்டுகின்ற காரியங்களே தீய குணங்களாகும். அக்காரியங்கள் அல்லாஹ்வுக்கும் கோபத்தை ஏற்படுத்துவ தாகும். மக்களின் மதிப்பைப் பெறுவதற்கும் அல்லாஹ்வின் அன்பை அடைவதற்கும் அழகிய செயற்பாடுகளே துணை நிற்கின்றன.

மேலும் ஒருவரை அணுகும் போது மலர்ந்த முகத்துடன் புன்னகை பார்வையுடன் நோக்க வேண்டும் என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

عَنْ أَبِي ذَرٍّ، قَالَ: قَالَ لِيَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «لَا تَحْقِرَنَّ مِنَ الْمَعْرُوفِ شَيْئًا، وَلَوْ أَنْ تَلْقَى أَخَاكَ بِوَجْهٍ طَلْقٍ»

நன்மையான எக்காரியத்தையும் அற்பமாக கருதாதே. உன் சகோதரனை புன்னகையுடன் சந்திப்பதாக இருப்பினும் சரியே என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூதர்(ரலி) நூல்: முஸ்லிம்

பணம் கொடுக்காமல், உடல் உழைப்புகள் இல்லாமல், தங்களை வருத்திக் கொள்ளாமல், மிகமிக இலகுவாக சம்பாதிக்கும் நன்மையே புன்னகையாகும். இதனைக் கூட அற்பமாக கருதி

விடலாகாது என நபியவர்கள் அறிவுறுத்துகிறார்கள். அற்பமான இந்த நன்மையே பெரும் நன்மைகளுக்கு வழி காட்டுகிறது.

இந்த புன்னகை உள்ளத்தின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். உண்மையான அன்பின் அடையாளமாக அமைய வேண்டும். அந்த புன்னகைக்கே வலிமை அதிகம். மனிதர்களை இனிய முகத்துடன் சந்தித்து பேசும் போது அல்லாஹ்வின் அருள் பொருந்திய வார்த்தைகளான ஸலாமை கூறி பேசுமாறும் கூறினார்கள்.